29.11.2023 அ.வ. எண். 141/2017 வா.சா.1 எல்லம்மாள்

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன் என்றால் ஆலத்தூரில் தான் வசித்து வருகிறேன். நான் ஆலத்தூரில் வசித்து வருகிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தற்போது நான் சென்னையில் இருக்கிறேன் என்றால் இல்லை. என் தாயார் பெயர் கன்னியம்மாள். 1ம் பிரதிவாதி என்னுடைய நாத்தனார். 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் குள்ளியம்மாள். குள்ளியம்மாளுக்கு இரண்டு மகள்கள் ஒரு மகன். மற்றொருவர் பெயர் அமராவதி. மகன் பெயர் வெங்கடேசன். வெங்கடேசன் என்னுடைய கணவர். அமராவதியை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. எனக்கு பட்டா கொடுத்தார்கள் அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் ஞாபகமில்லை. நான் சென்னையில் 30 ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு சென்னையில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கொடுத்த பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதியின் தாயார் குள்ளியம்மாள் 1ம் பிரதிவாதிக்கு 06.03.2006 ஆம் தேதி கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை. குள்ளியம்மாள் 1ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் எழுதியுள்ளதாக வழக்கில் சொல்லியுள்ளேன். அரசாங்கம் எனக்கு எப்போது பட்டா வழங்கியது என்றால் வருடம் ஞாபகமில்லை. எனக்கு பட்டா வழங்கவில்லை என்றும், நான் அந்த இடத்தில் அனுபவத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கூரை வீடு கட்டியுள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் பெயருக்கு பட்டா கொடுத்ததாக சொல்லும் காலத்தில் என் கணவர் பெயருக்கும் பட்டா வழங்கினார்கள் என்றால் இல்லை. என் கணவருக்கும் பட்டா வழங்கிய விவரம் தெரியும் என்றும், அது தெரிந்தே தெரியாது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. 1984 முதல் 1990 ஆம் ஆண்டு வரை தாவா சொத்து என்னுடைய சுவாதீன அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 1990 ஆம் ஆண்டு மறுசீரமைப்பு செய்து குள்ளியம்மாள் பெயருக்கு பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் அது செல்லாது. அவ்வாறு மறுசீரமைப்பு செய்து பட்டா வழங்கியபோது என் கணவர் பெயருக்கும் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் இல்லை. என் கணவர் பெயருக்கு பட்டா வழங்கியுள்ளதால் என் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் பட்டா செல்லாது. பட்டா செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்தேன் எந்த வருடம் என்று தெரியாது. நான் செய்யாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 98/ 2006 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே குள்ளியம்மாள் 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அ.வ.எண். 98/2006 வழக்கிற்கு முன்பாகவே குள்ளியம்மாள் 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டதால் அ.வ.எண். 98/2006 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை 1, 2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் கணவருக்கு கொடுத்த வீட்டுமனையை விற்பனை செய்துள்ளார் என்றால் விற்பனை செய்திருக்கலாம் எனக்கு தெரியாது. 1990 ஆம் ஆண்டு முதல் நான் என் மாமியாருடன் வசித்து வந்தேன். குள்ளியம்மாள் பெயருக்கு பட்டா வழங்கிய விவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றும், உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமல் காலம்கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குள்ளியம்மாள் இறந்து 7 ஆண்டுகள் ஆகிறது. அவர் இறந்ததற்கு நான் சென்றேன். குள்ளியம்மாள் உயிருடன் இருந்தபோதே வழக்கு தாக்கல் செய்தேன். குள்ளியம்மாள் இறந்து ஒரு வருடம் கழித்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அவர் இருந்தபோதே வழக்கு தாக்கல் செய்தேன். என் மாமியார் 2016 ஆம் ஆண்டு இறந்தார் என்றும் நான் 09.08.2017 ஆம் தேதி

வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அவர் இருந்தபோதே தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு வந்தார்கள். பிரதிவாதிகள் 01.06.2017 ஆம் தேதி அத்துமீறி பிரவேசித்தார்கள் என்பதற்காக காவல்நிலையத்தில் புகாரும் கொடுக்கவில்லை, பஞ்சாயத்தும் நடக்கவில்லை. 21.06.2017 ஆம் தேதி வில்லங்கசான்று பெற்று பார்த்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தில் வீடு இருந்தது. தாவா தாக்கல் செய்தபோது காலிமனையாக இருந்தது என்றும், வீடு இருந்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கடக்கால் அமைத்துள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன். அரசாங்கத்தை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். 23.04.1984 ஆம் தேதி ஊர்மக்கள் மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியருக்கு மனு கொடுத்தார்கள் என்றால் நானும் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கேட்டேன். அதனடிப்படையில் குள்ளியம்மாளுக்கு பட்டா வழங்கினார்கள் என்றால் பட்டா கொடுத்தார்கள் அது செல்லாது. குள்ளியம்மாள் பெயருக்கு பட்டா வழங்கியதை ஆட்சேபித்து மனு தாக்கல் செய்யவில்லை என்றால் நான் என்னசெய்ய வேண்டும் என்று சொல்கிறார். என் மாமியார் குள்ளியம்மாளுடன் ஒன்றாக இருந்து பட்டா வழங்கியது தெரிந்தே எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. குள்ளியம்மாளிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்று 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் என் பெயரில் உள்ளதை எவ்வாறு கிரையம் கொடுக்கமுடியும். 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றதை நான் ஆட்சேபனை செய்யமுடியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றது எந்த வருடம் என்றால் என்னால் வருடம் சொல்லமுடியாது. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விவரம் 02.07.2014 ஆம் தேதிக்கு முன்பாகவே தெரியும் என்றும், நான் கிராம நிர்வாக அலுவலரிடம் முறையீடு செய்துள்ளேன் என்றால்

கிராம நிர்வாக அலுவலரை பார்த்தேன். வா.சா.ஆ.1, 1998 ஆம் ஆண்டுவரை தான் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன்பிறகு நான் சென்னையில் வசித்து வருகிறேன் என்றும், வா.சா.ஆ.1 செல்லாது என்றால் சரியல்ல. அ.வ.எண். 98/ 2006 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றதால் அதை நான் ஆட்சேபிக்க முடியாது என்றால் சரியல்ல. அ.வ.எண். 98/2006 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், 12 ஆண்டுகள் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி முறையாக கிரையம் பெற்று 1ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் இருக்கட்டும் என சொல்கிறார். எல்லா விவரங்களும் தெரிந்து காலம்கடந்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.